(Chapter XXIII code of Criminal procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO-II, CHENGALPATTU.**
**DEPOSITION OF WITNESS**
**CC No. 118.2015**

| | |
|---|---|
| Deposition of witness for | : **(PW- )** |
| Name | : Mahima Datt Pathak |
| Father's Name | : Dr. B.D. Pathak |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 67 |
| Dated | : 13-06-2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13-06-2022**

**(The witness depose the evidence in english and the same was translated in tamil by me in accordance with 277 (c) of CRPC )**

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் புகாரினை கொடுக்கும் சமய்த்தில் சென்னை அம்பத்தூரில் உள்ள வாக்கோ இந்தியா லிமிட்-ல் vice president ஆக பணிபுரிந்து வந்தேன், தற்போது நான் பணிஓய்வு பெற்று லக்னோவில் எனது வீட்டில் வசித்து வருகிறேன். நான் 20/06/2013 மாவட்ட கண்காணிப்பாளரிடம் ஒரு புகாரினை தெரிவித்தேன் என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் என்னுடையது தான். அந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. அந்த புகாரினை நான் தான் தயார் செய்தேன் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் இந்த புகாரினை ஆஜரில் இருக்கும் எதிரி1 ஆன முத்துமாலை, எதிரி2 பத்மலோஷன் மீது தாக்கல் செய்தேன். ஆஜரில் இருக்கும் முத்துமாலை mahendra world city கம்பெனியின் உதவி மேலாளராக வேலை பார்த்தார்

மற்றும் 2வது எதிரியான பத்மலோஷன் Site finance leader ஆக வேலை பார்த்தார். எதிரி 1ஆன முத்துமாலை என்பவருக்கு கம்பெனியின் வேலைக்கான பழகுநர்களுக்கான விண்ணப்பம் வந்தவுடன் அவர் தொழிலாளர் அடையாள எண் SAP ஏற்படுத்துவார். பிறகு, அந்த நபர்களுக்கு வருகை பதிவேட்டுக்கு தேவையான Swipe card ஐ பெறுவதற்காக time office க்கு அனுப்பி வைத்து அவர்களுக்கு தேவையான Swipe card பெறுவதற்கான வேலை பார்த்து வந்தார், மற்றும் தலைமை அலுவலகமான finance department க்கு சம்பளம் வழங்க பரிந்துரை செய்து அனுப்பி வைப்பார். எதிரி 2ஆன பத்மலோஷன் என்பவருக்கு,நிர்வாகத்திலிருந்து approval வந்தவுடன் பயிற்சியாளர்களுக்கு சம்பள தொகை தயார் செய்வதும், ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் தனிதனியே கவர் தயார் செய்து(பாக்கெட் செய்து) அந்த தொகையை அந்த கவரில் வைத்து வரும் வேலை பார்த்து வந்தார். இந்த வேலையை அவர் அந்த கம்பெனியின் மற்ற பணியாளருடன் சேர்ந்து செய்து வந்தார். அந்த பாக்கெட்டுகளை தயார் செய்தவுடன் 2 பாகமாக பிரித்து ஒரு பாகத்தை எதிரி1ம் மற்றொரு பாகத்தை எதிரி2ம் வைத்து கொள்வார். மாதம் 7ம் மற்றும் 8ம் தேதியில் பயிற்சியாளர்களுக்கு மேற்சொன்ன பாக்கெட்டுகளை (styphan) கொடுத்து வந்தனர். பயிற்சியாளருக்கு கொடுக்கபடாத பாக்கெட்டுகள் அனைத்து எதிரி1ஆன முத்துமாலை தன்வசம் வைத்து கொண்டார். இந்த பாக்கெட்டுகளை வாங்காத பயிற்சியாளர்கள், இந்த கம்பெனியின் விலகி சென்ற பயிற்சியாளர்களின் பாக்கெட்டுகளை ஒவ்வொரு மாதமும்26ம் தேதி எதிரிகளான முத்துமாலை, பத்மலோஷன் மூலமாக central finance, ambatur க்கு அனுப்பி வைக்கும் வேலை கொடுத்து இருந்தது. இந்த கம்பெனியின் நிர்வாகத்திற்காக அற்புத ராஜ் என்பவர் DGM(Deputy General Manager) ஆக நியமிக்கப்பட்டார். மேலும் திலீப் குமார் (Executive HR) லியோ (Senior Executive HR) மற்றும் சேனாதிபதி (Security officer நியமிக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் கம்பெனியில் பரிசோதனை செய்து பார்த்ததில் குறைபாடுகள் காணப்பட்டன. அந்த குறைபாடுகள் என்னவென்றால் மேற்சொன்ன கம்பெனியை விட்ட சென்ற பயிற்சியாளர்களின் ID கள் முடக்கம் செய்யாமல் இருந்தது, பெயர்கள் இல்லாமல் ID நம்பர் மட்டும் போடப்பட்டு இருந்தது, கம்பெனியில் வேலை செய்யாத நபர்களின் பெயர்கள் Excel sheet ல்

காணப்பட்டு இருந்தது, பயிற்சியாளர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய bonus தொகைகளை முத்துமாலை கொடுக்காமல் இருந்தது காணப்பட்டது, பயிற்சியாளர்களின் லீவுக்கான தொகைகளையும் கொடுக்கபடாமல் காணப்பட்டது, 2013ல் மேற்சொன்ன குறைபாடுகளை வைத்து முத்துமாலையின் cabin ஐ நான் மற்றும் மேற்சொன்ன நபர்களான திலீப் குமார் (Executive HR) லியோ (Senior Executive HR) மற்றும் சேனாதிபதி (Security officer) சோதனை செய்தபோது சுமார் 17.86 லட்சம் தொகை பாக்கெட்டுகளில் காணப்பட்டது, எதிரிகள் முத்துமாலை மற்றும் பத்மலோஷனின் மேற்சொன்ன மோசடி செயல்களை 01/02/2011ம் தேதி முதல் 31/03/2013 வரை செய்து வந்து கொண்டிருந்தனர் என காணப்பட்டது. இந்த எதிரிகளின் மோச நடவடிக்கைகளை குறித்து விசாரணையை KPMG என்ற நிறுவனத்திற்கு எங்கள் கம்பெனி பரிந்துரை செய்தது மேற்படி பரிந்துரையின்படி விசாரணை மேற்கொள்ளப்பட்டது, விசாரணையின் தொடர்ச்சியாக 09/05/2013 அன்று KPMG என்ற நிறுவனம் முத்துமாலையின் cabin க்கு உள்ளே சென்று சோதனை செய்த போது சுமார் 13.86 லட்சம் தொகை மற்றும் ரூ,4000கான voucher காணப்பட்டது. பிறகு, 17/06/2013 அன்று இடைக்கால அறிக்கையும் மற்றும் 17/07/2013 அன்று இறுதி அறிக்கையை KPMG தாக்கல் செய்தனர். KPMG தாக்கல் செய்த அறிக்கையில் கம்பெனியில் வேலை செய்யபடாத நபர்களின் பெயர்களின் excel sheet ல் இருந்தது என சொல்லப்பட்டது, அந்த நபர்களின் பெயர் தாமோதரன் மற்றும் அருண்குமார் என காணப்பட்டது, மற்றும் இந்த நிர்வாகத்தை விட்டு சென்ற நபர்களின் போனஸ், ஸ்டைபன் தொகையும் மற்றும் நிர்வாகத்திலிருந்து பயிற்சியாளர்க்கு சேராத போனஸ், ஸ்டைபன் தொகையும் காணப்பட்டது, மற்றும் வேலையை விட்டு சென்ற பயிற்சியாளர்களின் ID கள் முடக்கபடாமல் காணப்பட்டது, மற்றும் internal audit ல் காணப்பட்ட குறைபாடுகள் அனைத்தும் இறுதி அறிக்கையில் காணப்பட்டது மொத்தமாக ரூ,46.47லட்சம் தொகை முத்துமாலையின் cabin ல் உள்ளே காணப்பட்டது, விசாரணையில் தாமோதரன் மற்றும் அருண்குமார் தாங்கள் நிறுவனத்தில் வேலை செய்யாதது குறித்து KPMG கம்பெனியில் எழுத்து பூர்வமான விண்ணப்பம் ஒன்று கொடுத்தனர். KPMG ன் இறுதி அறிக்கையின் படி எங்களின் நிர்வாகம் முத்துமாலை மற்றும் பத்மலோஷன் மீது இறுதி

அறிக்கை தாக்கல் செய்தது.

(அரசு தரப்பு வழக்கறிஞர் கோரிக்கைக்கேற்ப முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)